Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# The Hospitality of Ancient Tamils

**Dr. C.Parameswari,** Assistant Professor, Department of Tamil Research Centre,
Alagappa Govt. Arts College, Karaikudi-3.
ORCiD: https://orcid.org/0000-0002-8894-1483
**DOI: 10.5281/zenodo.6621521**

## Abstract

*The life of the world's living beings is set on hunger and starvation. Food is the basic source of life and development for living things. People from all walks of life used to go hungry with the food they got from their lands. In Sangam Tamil Nadu, Housewives are excelled in hospitality. She welcomes Panan who comes to her house and asks them to eat the baked meat of rabbit. They feed them, ignoring to say that they had no food, so they boiled the preserved grains they had to sow and cooked the food to satisfy their hunger. The monarchs also regarded the Panans as equal and donated to them a lot. as indifferent. Malai Kuravas have shared their foods with all the other people. The Iravalars (who get charity) not only enjoyed the food items received from the hosts but also distributed them to the bystanders. Therefore, the ancient Tamils, realizing that the body needs food to sustain life, lived as cultured souls who quenched the hunger of those who came to them with hunger.*

**Keywords:** Iravalars, Charity, Sharing food, Life, Ancient Tamils.

.

## References

[1] Thuraisamy Pillai, Avvai Su., *Purananooru Thoguthi – 1*, Moolamum – Uraiyum, Poonbukar Pathipagam, Chennai – 600108, Mutharpathippu: July 2009.
[2] Melathu, *Purananooru Thoguthi – 2*, Moolamum – Uraiyum, Poonbukar Pathipagam, Chennai – 600108, Mutharpathippu: July 2009.
[3] Devaneya Paavaanar.Gna., *Pandai Tamil Nakarikamum Panpadum*, Poonbukar Pathipagam, Chennai – 600108, Mutharpathippu, March 2009.
[4] Namasivayam.se, *Thamizhar Unavu*, Ulaga Tamil aaraichi niruvanam, Adaiyaru, Chennai- 600 020, Mutharpathippu: April 1981.
[5] Vellaivaaranan.Ka., (Aa.Vu); *Tholkappiyam Karpiyal Uraivalam*, Madurai Kamarajar Palkalaikazhakam, Madurai – 625 021, Mutharpathippu: 1983.
[6] Venkadasamay Naattaar, Na.Mu., Thuraisamy Pillai, Avvai su., Manimegalai, Thirunelveli, Thennindiya Saivasiddhantha Noorpathippu Kazhagam, limited, Chennai-18, Moondram Pathippu: December 1994.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பண்டைத்தமிழர் உணவுப்பண்பாடு

**முனைவர் சி.பரமேஸ்வரி,** உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,

அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி-3.

**ORCiD: https://orcid.org/0000-0002-8894-1483**

**DOI: 10.5281/zenodo.6621521**

**ஆய்வுச்சுருக்கம்**

*உலக உயிர்களின் வாழ்க்கையானது பசியும் பசி நீக்கமுமாக அமைகிறது. உயிரினங்கள் வாழ்வதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் அடிப்படை ஆதாரமாகத் திகழ்வது உணவு. ஒவ்வொரு நிலப்பகுதியில் வாழும் மக்களும் தங்கள் நிலப்பகுதிகளிலிருந்து பெறும் உணவுப் பொருட்களைக் கொண்டு பசிப்பிணியால் வாடும் இரவலர்களின் பசிப் பிணியைப் போக்கினர். இல்லறப் பெண்டிர் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். தம் இல்லதிற்கு வந்த பாணனை வரவேற்று முயலின் சுட்ட கறித்துண்டுகளை உணவாக உண்ண வேண்டுவர். இரவலர்களுக்கு உணவளித்துத் தீர்ந்த நிலையில் தன்னை நாடிவந்த இரவலர்களிடத்து உணவு இல்லை என்று சொல்ல மனமில்லாது விதைப்பதற்கென வைத்திருந்த தினையை உரலிலிட்டுக் குற்றி உணவு சமைத்துப் பசிப்பிணியைப் போக்கினர். குறுநில மன்னர்களும் இரவலர்களை வேறுபாடாக எண்ணாமல் ஒப்ப மதிக்கும் பண்பினராகத் திகழ்ந்தனர். மலைக் குறவர்கள் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பினர். இரவலர்கள், புரவலர்களிடத்துப் பெற்ற உணவுப் பொருட்களைத் தான் மட்டும் அனுபவிக்காது சுற்றத்தார்களுக்கும் பகிர்ந்தளித்தனர். எனவே உடலானது உயிரை வளர்க்க உணவு தேவை என்பதை உணர்ந்த பண்டைத் தமிழர் தம்மிடத்துப் பசிப்பிணியால் வருவோரின் பசியைப் போக்கி உயிர்கொடுக்கும் பண்பட்ட உள்ளத்தினராகத் திகழ்ந்தனர்.*

**திறவுச் சொற்கள்:** இரவலர்களுக்கு உணவளித்தல், இரவலர்களை, பகுத்தளித்தல், உணவே உயிர்.

## தொடக்கவுரை

பண்டைத் தமிழர் உள்ளத்தோடு இயைபுடையதாகத் திகழும் பண்பாட்டுணர்வினர். பண்பாட்டுணர்வில் உணவுப் பண்பாடு தமிழரின் குருதியில் இரண்டறக் கலந்ததாகும். தாங்கள் உண்ணக் கூடிய உணவுப் பொருள்களை பசியோடு வரும் இரவலர்களுக்கு ஈந்தனர். தன்னிடம் உள்ள உணவு சிறிதாக உள்ள போதும் இருப்பதைப் பகுத்துண்டு மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர். இரவலர்களும் தாம் பெற்ற பரிசுப் பொருள்களைப் பல்லோருக்கும் பகிர்ந்தளித்தனர். வறுமையிலும் கொடியது பசிக்கொடுமை. இத்தகையக் கொடியப் பசிப்பிணியைப் போக்கி உயிரூட்டினர். ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தனர். இச்செய்திகளைக் குறித்து அறிவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## பண்பாடு

தமிழரின் தலையாய கடமை பண்பாட்டுணர்வோடு வாழ்தலாகும். “பண்பாடு மக்களை மாக்களினின்று பிரித்து உயர்த்துவதாகும். தமக்கென வாழாது பிறர்க்கென முயலுதலும்,

கிடைத்தற்கரிய அமுதமே கிடைப்பினும் தாமே உண்ணாது பிறருடன் கலந்து உண்ணுதலும் வாழ்வில் வெறுப்பற்று இருத்தலும் தாம் மேற்கொண்டுள்ள கருமத்தில் அயர்வற்று இருத்தல் என்பதும் உயர்பண்புடையாளர்க்குரிய குணங்களில் இன்றியமையாதனவாகும். இதில் அமுதமே கிடைப்பினும் பிறருடன் பகிர்ந்துண்ட உயர்பண்புடையவர் நம் தமிழர்" (சே. நமசிவாயம், தமிழர் உணவு, ப.153) "எளியாரிடத்தும் இனிதாகப் பேசுவதும், புதிதாய் வந்த ஒழுக்கமுள்ள அயலாரை விருந்தோம்புவதும், இரப்போர்க்கிடுவதும், இயன்றவரை பிறருக்குதவுவதும், கொள்கையும் மானமுங் கெடின் உயிரை விடுவதும் பண்பாட்டுக் கூறுகளாகும். சுருங்கச் சொல்லின் உள்ளத்தின் செம்மை பண்பாடும், உள்ளத்திற்குப் புறம்பான உணவு, உடை, உறையுள் முதலியவற்றின் செம்மை நாகரிகமும் ஆகும்"(ஞா. தேவநேயப் பாவாணர், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், பக். 15-16)

**இல்லறப் பெண்டிர்**

இல்லறப் பெண்டிரின் மாண்புகளாக வறுமை, செல்வம் இவற்றைக் குறியாகக் கொள்ளாமல் வல்லவாற்றான் விருந்தினரைப் பாதுகாத்து மனமகிழ்வித்தலும் சுற்றங்களைப் பாதுகாத்தலுமென்பதைத் தொல்காப்பியம்,

**"…வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோள் மாண்புகள் "" ( தொல். கற். 11; 2–4 )**

என்று குறிப்பிடும்.

இல்லாள், பாணனிடம் முயலின் சுட்டக் கறித்துண்டுகளை உணவாகத் தருகிறோம். அவற்றை தம் இல்லத்துள் தங்கியிருந்து உண்ண வேண்டுகிறாள்.

**"முயல்சுட்ட வாயினுந் தருகுவேம் புகுதந்**
**தீங்கிருந் தீமோ முதுவாய்ப் பாண" (புறநா. 319; 8-9)**

என்பதில் இல்லறப் பெண்டிர், விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர் என்பதை அவர்களின் வரவேற்பினாலும் உபசரிப்பினாலும் அறிந்துகொள்ளப்பெறும். முல்லை நிலத்தைச் சார்ந்த புன்செய் கொல்லைகளையுடைய சீறூர்களில் நெற்பயிர் அதிகமாக விளைவதில்லை. வரகு, தினை மட்டும் விளையக்கூடியன. இதனை அந்நிலப்பெண்டிர் பசியால் வருந்திவரும் இரவலர்களுக்கு வழங்கியமையால் அவையும் தீர்ந்து போயின.

**"…புறவுசேர்ந் திருந்த**
**புன்புலச் சீறூர் நெல்விளை யாதே**
**வரகுந் தினையு முள்ளவை யெல்லாம்**
**இரவன் மாக்களுக் கீயத் தொலைந்தன" (புறநா. 328 1-4 )**

முல்லை நில மக்கள் தங்கள் நிலத்தில் விளையக்கூடிய உணவுப்பொருள்களை இரவலர்களுக்கு வழங்கும் பெருமித உணர்வுடையர். உலர்ந்த ஊன் துண்டங்களைக் கொய்துவரப்பட்ட கதிர்களிலிருந்து பெறப்பட்ட அரிசியோடு நெய் ஊற்றித் துடுப்பினால் துழாவிக் களியாகச் சமைத்து, வெண்சோற்றினை இரவலர்களுக்குப் பசிதீர அளித்து உண்டு மகிழ்ந்தனர்.

**"…வாடூன் கொழுங்குறை**
**கொய்குர லரிசியோடு நெய்பெய் - தட்டுத்**
**துடுப்பொடு சிவணிய களிக்கொள் வெண்சோ**

**றுண்டினி திருந்த பின்றை" (புறநா. 328: 9-12)**

என்பதால் ஊன் துண்டங்களைச் சோற்றில் கலந்தடுதல் பண்டையோர் மரபாகக் கருதப்பெற்றது. தன்னிடமிருந்த வரகு, தினையாலாகிய உணவுப்பொருள்களை இரவலர்களுக்கு வழங்கியமையால் உணவுப்பொருள்கள் இல்லத்தில் இல்லை. குறியெதிர்ப்பாகவும் பொருள்களைப் பெற இயலவில்லை. இப்படிப்பட்ட சூழலில் பசிக்கொடுமையால் தன்னை நாடி வந்த இரவலர்களிடத்து உணவு தீர்ந்துவிட்டது என்று சொல்ல மனமில்லை. விதைப்பதற்கென வைத்திருந்த தினையை உரலிலிட்டுக் குற்றி உணவு சமைத்து வழங்கினர்.

**"வரகுந் தினையு முள்ளவை யெல்லாம்**
**இரவன் மாக்க ளுணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்துமா றெதிர்ப்பை பெறாஅ மையிற்**
**குரலுணங்கு விதைத்தினை யுரல்வாய்ப் பெய்து**
**சிறிது புறப்பட்டன் றோவிலள் " (புறநா. 333: 9-13 )**

விதைப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் தினை, வரகு ஆகியவற்றை மனைக்கூரையில் கட்டித்தொங்க வைத்திருப்பர். உண்ணவும் கொள்ளவும் வரகு, தினை ஆகியன இல்லையாயினும் இல்லையென்னாது விதைப்பதற்கென வைக்கப்பட்டவற்றைக் குற்றி உணவாக்கி இரவலர்களுக்கு வழங்குவர். தன் இல்லத்திற்கு வந்தோர் யாவராயினும் பசியுடன் புறத்துச் செல்லக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாகத் திகழ்ந்தனர். வளர்கின்ற ஒன்று குன்றுவதும் குன்றிப்போவது வளர்வதும் பிறந்தது இறப்பதையும் இறந்தது பிறப்பதையும் உண்மையெனக் கல்லாதவரும் அறியுமாறு செய்யும் திங்களாகிய தெய்வம். அத்திங்கள் இயங்கும் உலகத்தில் இல்லற மகளிர் ஒன்றைச் செய்ய வல்லவராயினும் செய்ய இயலாதவராயினும் வறுமையால் வருந்தி வந்தோரின் வயிற்றின் பக்கங்களைக் கருதி அவர்களுக்கு அருளுடன் வழங்க வல்லவர்.

**"தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்**
**மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்**
**அறியா தோரையு மறியக் காட்டித்**
**திங்கட் புத்தே டிரிதரு முலகத்து**
**வல்லா ராயினும் வல்லுந ராயினும்**
**வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி**
**அருள வல்லை யாகுமதி" (புறநா. 27: 11-17)**

இதில் திங்களின் இயல்பால் வாழ்க்கை உணர்த்தப்பெற்றது. வளர்தலும் தேய்தலும் பிறத்தலும் இறத்தலும் உடையது உலகம். இவ்வுலகத்தில் வருந்தி வந்தோர்க்கு வேண்டுவன அருளும் வன்மைதான் வெற்றிக்கு மாண்பு என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

**குறுநில மன்னன்**

காட்டையுடைய குடநாட்டு மறவர் வேட்டையாடிக் கொண்டு வந்த எய்ப்பன்றித் தசையுடன் செவ்விய நிணமிக்க வெண்சோற்றுக் கட்டியை வருவார்க்கெல்லாம் குறைபடாது ஒப்ப வழங்குபவன் ஆதி. அச்சோற்றுக்கட்டியை இரவலர், பனையோலையால் செய்யப்பெற்ற பனங்குடையில் பெற்று உண்டு மகிழ்வர்.

**"பெரும்பெய ராதி பிணங்கரிற் குடநாட்**

**டெயினர் தந்த வெய்ம்மா னெறிதசைப்**
**பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை**
**வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய**
**இரும்பனங் குடையின் மிசையும்" (புறநா. 177: 12-16 )**

மல்லியென்னும் ஊருக்குத் தலைவனாகிய காரியாதி வெண்சோற்றுக்கட்டியை வருவார்க்கெல்லாம் குறைபடாது ஒப்ப வழங்குபவனாகவும் இரவலர்களை ஒப்ப மதிக்கும் ஆற்றல் மிக்கவனாகவும் திகழ்ந்தமை அறியமுடிகிறது.

**மலைக்குறவர்**

மலைக்குறவர், சிறுதிணை விளைந்த நிலையில் புதுவருவாயாகிய அத்திணைக்கதிரை நல்ல நாளில் புதிதுண்ண வேண்டி, மானிறைச்சி சமைத்த புலால் நாறும் பானையில் மரையாவின் பாலை உலைநீராகக் கொண்டு, சந்தன விறகால் எரியூட்டித் திணையைச் சமைத்தனர். பிறகு அத்திணைச் சோற்றை முற்றத்திடத்து குலையுடைய வாழையின் இலையில் பலருடன் பகுத்து உண்ணுவதை,

**"…குறவர்**
**உழாது வித்திய பரூஉக்குரற் சிறுதினை**
**முந்துவிளை யாணர் நாட்புதி துண்மார்**
**மரையான் கறந்த நுரைகொ டீம்பால்**
**மான்றடி புழுக்கிய புலவநாறு குழிசி**
**வான்கே ழிரும்படை கழாஅ தேற்றிச்**
**சாந்த விறகி னுவித்த புன்கம்**
**கூதளங் கவினிய குளவி முன்றிற்**
**செழுங்கோள் வாழை யகவிலைப் பகுக்கும்" (புறநா. 168: 05 - 13)**

என்பது உணர்த்தும்.

மலைக்குறவர், புதிதாக விளைந்த தினையரிசிச் சோற்றை முதன்முதலில் தான் மட்டும் உண்ணவேண்டும், பிறருக்கு பகுத்தளித்தால் தொடர்ந்து இச்சூழல் உருவாகும் என்று எண்ணாதவர். முதன்முதலில் உண்ணும்போதே பல்லோர்க்கும் பகுத்தளித்தால் நாள்தோறும் பகிர்ந்தளித்து உண்ணும் நிலை ஏற்படுமென்ற நல்லெண்ணத்தால் பகுத்தளித்து உண்ணும் இயல்பினை அறியமுடிகிறது. மலைவாழ்நர் மான்தோலின் மேல் தினையரிசியைப் பரப்பி உலர வைப்பர். அப்போது காட்டுக்கோழியும் இதற்பறவையும் கவர்ந்துண்டு கொண்டிருக்கும்போது அதனை அகப்படுத்துவர். பிறகு அதனைச் சந்தனக் கட்டையாலாகிய நெருப்பில் சுட்டு துண்டு துண்டாக அறுத்த இறைச்சியோடு ஆரல் மீனின் நாற்றமும் உடன்கமழ சுற்றத்தாரோடு இனிதுண்டு மகிழ்வர்.

**"மானதட் பெய்த வணங்குதினை வல்சி**
**கானக் கோழியொ டிதல்கவர்ந் துண்டென**
**ஆர நெருப்பி னார னாறத்**
**தடிவார்ந் திட்ட முழுவள் ளூரம்**
**இரும்பே ரொக்கலொ டொருங்கினி தருந்தி" (புறநா. 320: 10 - 14 )**

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

தினையுணங்கலைக் கானக்கோழியும் இதலும் அஞ்சாது கவர்ந்துண்டற்கு இடம் தந்து, அதனைப்பிடித்து அவ்விறைச்சியையும், ஆரல்மீனையும் சந்தன விறகில் சுட்டு விருந்தினர்களுக்கு அளித்து உபசரித்ததை அறியமுடிகிறது.

**இரவலர்**

இரவலர், பழுத்த மரம் தேர்ந்து செல்லும் பறவை போலக் கொடைக்குரியவரைக் கருதிச் செல்வர். 'நீண்ட வழி' எனக் கருதாது கடத்தற்கரிய பல பகுதிகளையும் கடந்து செல்வர். குற்றமில்லாத தெளிந்த சொற்களால் தமக்கியன்றவாறு பாடிப் பரிசில் பெறுவர். அப்பரிசிலைத் தம் சுற்றத்தினருக்குத் தந்தும் தம்மிடம் மறைத்துக் கொள்ளாது தாமும் உண்டும், தம் உள்ளம் மலரப் பிறர்க்கு வழங்கியும் வாழ்வர். தம்மை ஆதரிப்பார் தமக்குச் செய்யும் சிறப்பின் பொருட்டு வருந்தும் பரிசில் வாழ்க்கையை உடையவர். இத்தகைய வாழ்க்கை பிறருக்குத் தீமை புரிய அறியுமா எனில் அறியாது.

**"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி**

**நெடிய வென்னாது சுரம்பல கடந்து**

**வடியா நாவின் வல்லாங்குப் பாடிப் ...**

**...வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை**

**பிறருக்குத் தீதறிந் தன்றோ வின்றே" (புறநா. 47: 1 - 7)**

என்பதால் இரவலர் பசியால் வாடக்கூடிய நிலையில் புரவலரை நாடிச் சென்று பரிசில் பெறுதல் இயல்பு. தாம் பெற்ற பரிசிலைத் தான் மட்டும் வைத்துக்கொண்டு மகிழ்வுடன் வாழ்வோம் என்று எண்ணாதவர். பெற்ற பரிசிலைப் பிறர்க்கும் பகுத்தளித்து வாழும் இன்ப வாழ்வையுடையவர் என்பதை அறியமுடிகிறது.

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**

நீரின்றி அமையாது உடல், உணவால் அமைவது. உணவை முதன்மையாக உடையது. உணவு தந்தவர் உயிரைத் தந்தவர். எனவே உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும். நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்தவர் இவ்வுலகில் உடலையும் உயிரையும் கூட்டிப் படைத்தவர். நிலப்பகுதிகள்தோறும் நீர்நிலை பெருகச் செய்தல் வேண்டும். அவ்வாறு நிலத்துடன் நீரைக் கட்டியோர் இவ்வுலகில் தன் பெயரை உலகுள்ளவரை நிறுத்தி நிலைபெற்ற புகழை அடைவர். அவ்வாறு செய்யாதவர் புகழை அடையார்.

**"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்**

**உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே**

**உண்டி முதற்றே யுணவின் பிண்டம்**

**நீரு நிலனும் புணரி யோரின்**

**டுடம்பு முயிரும் படைத்திசி னோரே...**

**...நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்**

**தட்டோ ரம்ம விவட்டட் டோரே**

**தள்ளா தோரிவட் டள்ளா தோரே " (புறநா. 18: 18 – 23, 28 - 30 )**

என்பதால் உடல், உயிர் வளர்க்க உணவு தேவை. எனவே உயிராக உணவு கொள்ளப்பெற்றது. உணவைப் பெற நீரும் நிலனும் இன்றியமையாதது. எனவே நீரும் நிலனும் உடலும் உயிரும் போன்றது. இதில் நிலம் உணவு தருதலால் உயிராகவும் நீர் நிலத்தின் தன்மைக்கேற்ப இயங்குதலும்

தன்மை பெறுவதுமாகத் திகழ்வதால் உடலாகவும் கருதப்பெற்றது. நிலம் குழிந்த பகுதிகளில் நீர்நிலை பெருகச் செய்தோர் இவ்வுலகில் நிலையான புகழை அடைவர். எனவே உணவு உயிராகக் கூறப்பெற்றது. மணிமேகலை, வறிஞர்களின் தீர்த்தற்கரிய பசியை நீக்குவது உலகத்தின் உண்மை நெறியாகிய வாழ்க்கை. அணுக்கள் செறிந்த நிலவுலகில் வாழ்வோருள் உணவினை அளித்தோர் உயிர் கொடுத்தோராவர் என்று குறிப்பிடுவதை,

**“ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்**
**மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை**
**மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே” (மணி. பாத். பெற். காதை: 93 - 96)**

என்பதால் அறியப்பெறும். இவ்வாறு வறிஞர்களின் பசிப்பிணியைப் போக்குதல் உயிர் கொடுத்தலைப் போன்றது என்பதை உணர்ந்த பண்டைத் தமிழர் உணவு அளிப்பதற்கு மழைவளம் வேண்டுமென்பதை உணர்ந்தனர். மணிமேகலை, மக்களிடத்துப் பசியில்லாதிருக்க நாட்டில் மழைவளம் பெருக வேண்டுமென்று வாழ்த்துவதை,

**“பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி” (மணி. விழா. காதை: 70 - 71)**

என்பதால் அறிய இயலும்.

**முடிவுரை**

பண்டைத் தமிழர் பசியால் வாடும் வறிஞர்களின் பசிப்பிணியைப் போக்குதல் உயிர் கொடுத்தலுக்கு ஒப்பாகும் என்பதை உணர்ந்தனர். தன்னிடம் உள்ள உணவு சிறிதாயினும் வறிஞர்களைப் புறம்போகவிடாது, இருப்பதைப் பல்லோருக்கும் பகுத்தளித்து மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

**துணைநூற்பட்டியல்**

[1] துரைசாமிப் பிள்ளை, ஔவை சு., புறநானூறு தொகுதி – 1, மூலமும் – உரையும் பூம்புகார் பதிப்பகம், 2009.
[2] மேலது, புறநானூறு தொகுதி – 2, மூலமும் – உரையும் பூம்புகார் பதிப்பகம், 2009.
[3] தேவநேயப் பாவாணர். ஞா., பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், பூம்புகார் பதிப்பகம், 2009.
[4] நமசிவாயம். சே, தமிழர் உணவு, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை – 1981.
[5] வெள்ளைவாரணன்.க., (ஆ.உ); தொல்காப்பியம்கற்பியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021, 1983.
[6] வேங்கடசாமிநாட்டார், ந.மு., துரைசாமிப்பிள்ளை, ஔவைசு., மணிமேகலை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடட், சென்னை – 18,1994

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.